**20.11.2014 வியாழக்கிழமை**
**காலை 10.30 மணிக்கு**
**நடைபெற்ற சாதாரண**
**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**

**வ.து.ந.க.எண்.ஜி3/7211/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.567/2014 **பொருள் எண்.01**

**தொழில் உரிமம் – சென்னை மாநகராட்சி – வருவாய் துறை – உரிமம் வழங்கும் காலத்தினை நீட்டிப்பு செய்ய சட்டத்திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி**

2014–15ஆம் ஆண்டைய நிதிநிலை அறிக்கையின்போது, தொழில் உரிமம் வழங்கும் காலத்தினை ஓராண்டு காலத்திலிருந்து ஐந்து ஆண்டு காலமாக மாற்ற உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.279, 287, 299, 304 மற்றும் 309ன்கீழ் வருவாய் துறை மூலமாக தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டுவருகிறது. இதன் விவரச் சுருக்கம் பின்வருமாறு

| வரிசை எண். | பிரிவு | விவரம் | சட்டப்பிரிவில் வரையறுக்கப்பட்ட உரிமத்தின் காலம் |
|---|---|---|---|
| 1 | 279 | உணவுப் பொருட்கள் விற்பனை | – |
| 2 | 287 | தொழிற்கூடங்கள் | பிரிவு எண்.287 (6) – அந்தந்த நிதியாண்டு இறுதியில் காலாவதியாகிவிடும். |
| 3 | 299 | பால் விற்பனை | – |
| 4 | 304 | தனியார் சந்தைகள் | பிரிவு எண்.304 (எ) – அந்தந்த நிதியாண்டு இறுதியில் காலாவதியாகிவிடும். |
| 5 | 309 | இறைச்சி கடைகள் | பிரிவு எண்.309 (3) – அந்தந்த நிதியாண்டு இறுதியில் காலாவதியாகிவிடும். |

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.365(2)ன்படி, தொழில் உரிமத்திற்கான கட்டணத்தினை தொழில் உரிமம் பெறுவதற்கு முன்பே (licence fees shall be paid in advance) சென்னை மாநகராட்சிக்கு செலுத்திட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தொழில் உரிமங்கள் யாவும் ஓராண்டு காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. வழங்கப்படும் உரிமத்தின் காலம் அந்தந்த நிதியாண்டு முடிவடையும்போது தானாகவே காலாவதியாகிவிடும். வணிகர்களின் கோரிக்கையின் அடிப்படையில் தொழில் உரிமங்கள் ஓராண்டு காலத்திற்கு புதுப்பிக்கப்படுகிறது.

தொழில் உரிமத்திற்கான காலம் ஓராண்டு காலம் மட்டுமே உள்ளதால், ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும் உரிமத்தினை புதுப்பிக்க வணிகர்கள் சென்னை மாநகராட்சியினை அணுக வேண்டியுள்ளது.

எனவே, தொழில் உரிமத்தின் காலத்தினை ஐந்து ஆண்டுகாலமாக உயர்த்தினால், நிர்வாக பணிச்சுமை குறைவதோடு, வணிகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். மேலும், வழங்கப்படும் உரிமத்தின் காலம் காலாவதியானவுடன் மீண்டும் ஐந்து ஆண்டுகாலத்திற்கு புதுப்பிக்கலாம் இதற்கு தேவையான சட்டத்திருத்தத்தினை மேற்கொள்ளலாம்.

எனவே, வணிகர்களின் நலன் கருதி,

1) புதியதாக வழங்கப்படும் தொழில் உரிமத்தின் காலத்தினை ஓராண்டு காலம் என்பதனை மாற்றி ஐந்து ஆண்டுகாலம் என உயர்த்திடவும்,
2) தொழில் உரிமத்தின் காலம் காலாவதியானவுடன், அவற்றை ஐந்து ஆண்டு காலத்திற்கு புதுப்பித்திடவும்,

தேவையான சட்டத்திருத்தத்தினை மேற்கொள்ள அரசினைக் கோரிட நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.40/2014, நாள்.12.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.452/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பா.து.ந.க.எண்.பி3/0341/2012**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 30.10.14 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.568/2014 **பொருள் எண்.02**

**பாலங்கள் துறை – மண்டலம் –6, வார்டு – 73ல் ஸ்டீபன்சன் சாலையில் ஏற்கனவே உள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி – 2014-15 ஆம் ஆண்டு விலைப் பட்டியல் படி தயாரித்த ரூ.10,99,00,000/– மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிக்கு ரூ.9,90,00,000/–க்கு 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியல்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்ற தீர்மான எண்.37/2014 நாள்.24.01.2014. மூலம் அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. ஒரே ஒரு ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது. மூன்று முறை பேச்சு வார்த்தைக்கு பிறகு 2013–14 அலுவலக விலைப்பட்டியலை விட (+) 39.50% அதிகமாக விலை கோரியதால் ஒப்ப பரிசீலனை குழுமத்தால் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்பணிக்கு தற்போது 2014–15 ஆம் ஆண்டு அலுவலக விலைப் பட்டியல்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம் –6, வார்டு – 73ல் ஸ்டீபன்சன் சாலையில் ஏற்கனவே உள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி. |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர்/ பொது எண்.28/2014–15 நாள். 24.10.2014. |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014 – 2015 |
| 06. மதிப்பீட்டின் தொகை | | |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 8,49,61,051.67 |
| (ஆ)மேற்பார்வை செலவினம் 10% | : | ரூ. 84,96,105.17 |
| (இ) சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | : | ரூ. 21,24,026.29 |
| (ஈ) சேவைத்துறையினருக்கு தொகை | : | ரூ. 40,00,000.00 |
| (உ) மின் விளக்குகள் அமைத்தல் | : | ரூ. 10,00,000.00 |
| (ஊ) விலையேற்றத்தொகை | : | ரூ. 63,72,078.87 |
| (எ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1.0 % | : | ரூ. 8,49,610.52 |
| (ஏ) எதிர்பாரா செலவினம் 2.5% | : | ரூ. 20,97,127.48 |
| மொத்தம் | : | ரூ.10,99,00,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | --- |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | 6வது வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |

10. நிதியின் மூலத்தன்மை : மூலதன நிதி

(அ) வரவு செலவு ஒதுக்கீடு
பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள்
2014 – 2015 : ரூ,25,00,00,000/–

(ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை : } ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

(இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) :

(ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி : ரூ.10,99,00,000/–

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.10,99,00,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி மதிப்பீட்டு தொகைக்கு அரசின் அனுமதி பெறப்படுவதற்கும், மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும், அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும், நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானஎண்.446/14நாள்.17.11.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்/454/2014, நாள்.18.11.2014–ன்படி வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.7.ந.க.எண்.இ1/849/ 2014**
**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–10–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.569/2014 **பொருள் எண்.03**

**மதிப்பீடு– 2013–14 ஆம் ஆண்டிற்கான பணி –மண்டலம்–7(அம்பத்தூர்) கீழ்கண்ட பணிகளுக்கு 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பின்னேற்பு அனுமதி**

| வ. எண் | வார்டு | சிப்பம் எண் | மதிப்பீட்டு எண் | பணி/சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 79 | 2 | NG/ 2013–14 / 27765 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள திருவேங்கடம் தெரு மற்றும் மூகாம்பிகை தெரு ஆகிய தெருக் களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 800.00 | 4000 | 9330000.00 |
| 2 | 79 | 2 | NG/ 2013–14 / 27764 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள பாபுஜி தெரு, பரமேஸ்வரன் தெரு, காமராஜர் தெரு, வள்ளியம்மாள் தெரு, டானியேல் 1வது மற்றும் 2வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 520.00 | 2600 | 6050000.00 |
| 3 | 79 | 1 | NG/ 2013–14 / 21317 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள வாசுகி அம்மன் தெரு, மணிமேகலை தெரு, பாரதிதாசன் தெரு மற்றும் செங்கல்வராயன் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 740.00 | 3700 | 7840000.00 |
| 4 | 79 | 2 | NG/ 2013–14 / 27782 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள அன்னை தெரேசா தெரு, கலைவாணர் தெரு, கலைவாணர் 1வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 850.00 | 4250 | 9450000.00 |
| 5 | 79 | 2 | NG/ 2013–14 / 27768 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள புஷ்பா தெரு, புஷ்பா 1வது மற்றும் 2வது குறுக்கு தெரு, சாமிசெட்டி தெரு, சாமிசெட்டி குறுக்கு தெரு, வேளாங்கண்ணி தெரு, வேளாங்கண்ணி குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 820.00 | 4100 | 9640000.00 |
| 6 | 79 | 1 | NG/ 2013–14 / 21392 | மண்டலம்–7 பகுதி–18வார்டு–79ல் உள்ள அவ்வையார் தெரு, விவேகனந்தர் தெரு மற்றும் பட்டினத்தார் தெரு ஆகிய தெருக் களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 550.00 | 2750 | 6440000.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 79 | 1 | NG/ 2013–14 / 21323 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள ஒற்றைவாடை தெரு, கட்டபொம்மன் தெரு மற்றும் மதுரை வீரன் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 510.00 | 2550 | 6010300.00 |
| 8 | 79 | 2 | NG/ 2013–14 / 27770 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள ராஜீவ் காந்தி தெரு, ராஜீவ் காந்தி குறுக்கு தெரு, எல்லையம்மன் தெரு, அன்பழகன் தெரு, குமரன் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 810.00 | 4050 | 9590000.00 |
| 9 | 79 | 1 | NG/ 2013–14 / 27761 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள சீதாராமன் தெரு, சீதாராமன் 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 860.00 | 4300 | 9990000.00 |
| 10 | 79 | 2 | NG/ 2013–14 / 27773 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள வ.உ.சி தெரு, பெருமாள் கோயில் தெரு, அம்பேத்கார் தெரு, கலைவாணர் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 700.00 | 3500 | 7190000.00 |
| 11 | 79 | 2 | NG/ 2013–14 / 27763 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள ஜீவானந்தம் தெரு, சிவசண்முகம் பிள்ளை தெரு, கக்கன்ஜி தெரு, சிவாஜி கணேசன் தெரு, ஜோதி வெங்கடாச்சலம் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி | 590.00 | 2950 | 6920000.00 |
| 12 | 79 | 1 | NG/ 2013–14 / 21389 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள ஐயப்பன் தெரு மற்றும் தாகூர் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 600.00 | 3000 | 7000000.00 |
| 13 | 79 | 2 | NG/ 2013–14 / 27766 | மண்டலம்–7 பகுதி–18, வார்டு–79ல், உள்ள வரலட்சுமி தெரு மற்றும் வரலட்சுமி 1வது முதல் 3வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 590.00 | 2950 | 6920000.00 |
| 14 | 83 | 12 | NG/ 2013–14 /30307 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள காவியா நகரிலுள்ள சாலை களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 800.00 | 4800 | 9950000.00 |
| 15 | 83 | 23 | NG/ 2013–14 / 30707 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள ஐயப்பன் நகர் 5வது முதல் 7வது தெரு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 650.00 | 3900 | 8200000.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | 83 | 11 | NG/ 2013–14 / 30168 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள SRB நகர் 1வது தெரு முதல் 4வது தெரு வரை தார் சாலை அமைக்கும் பணி. | 650.00 | 3900 | 8240000.00 |
| 17 | 83 | 12 | NG/ 2013–14 / 30313 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள சிவலிங்கபுரம் பிரதான சாலை மற்றும் 1வது மற்றும் 2வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 770.00 | 4620 | 9750000.00 |
| 18 | 83 | 11 | NG/ 2013–14 / 27930 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள குமரன் நகர் விரிவு, பாரதி தெரு மற்றும் வ.உ.சி தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 800.00 | 4800 | 9950000.00 |
| 19 | 83 | 11 | NG/ 2013–14 / 27395 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள காமகோடி தெரு, எம்ரால்டு தெரு மற்றும் முருகன் கோவில் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி. | 770.00 | 4620 | 9750000.00 |
| 20 | 83 | 12 | NG/ 2013–14 / 30283 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள SRB நகர் 5வது தெரு முதல் 9வது தெரு வரை தார் சாலை அமைக்கும் பணி. | 800.00 | 4800 | 8500000.00 |
| 21 | 83 | 12 | NG/ 2013–14 / 30291 | மண்டலம்–7 பகுதி–19, வார்டு–83ல், உள்ள SRB நகர் 10வது தெரு முதல் 13வது தெரு வரை தார் சாலை அமைக்கும் பணி. | 610.00 | 3660 | 7700000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள 21 பணிகளுக்கு 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008 நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி –78ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (மற்றும்) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 445/14 நாள்.17.11.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.457/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.3.ந.க.எண்.A1/2434/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.570/2014 **பொருள் எண்.04**

**மண்டலம்–3 (மாதவரம்) வார்டு–26 – வீடற்றவர்களுக்கான காப்பகத்திற்கு (Shelter for Homeless) – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான MBTT Complex–ல் உள்ள பயன்பாடின்றி உள்ள கட்டிடத்தினை சென்னை மாநகராட்சி வசம் மாத வாடகை என்ற வகையில் எடுத்துக் கொள்ள – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் இசைவு தெரிவித்துள்ளது – மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–3, (மாதவரம்), வார்டு–26ல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான MBTT Complex–ல் பயன்பாடின்றி உள்ள நிர்வாக அலுவலக கட்டிடத்தில், வீடற்றவர்களுக்கான காப்பகம் அமைக்க, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 14–08–2013 தேதியிட்ட இசைவு கடிதம் பெறப்பட்டது. அக்கடிதத்தில் மேற்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான, பயன்பாடின்றி உள்ள நிர்வாக அலுவலக கட்டிடத்தினை சென்னை மாநகராட்சி வசம் மாத வாடகை அடிப்படையில், ஒப்படைக்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது மாத வாடகையாக ரூ.99,330/– (ரூபாய் தொண்ணூற்று ஒன்பதினாயிரத்து முன்னூற்று முப்பது மட்டும்) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு செலுத்தவும் இசைவு கடிதம் பெறப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் மீண்டும் 04–10.2013 அன்று உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் பயன்பாடின்றி உள்ள நிர்வாக அலுவலக கட்டிடத்தினை வீடற்றவர்களுக்கான காப்பகம் (Shelter for Homeless) அமைக்க வாடகை ஏதுமின்றி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் Authority Resolution No.14/2014 dt.03.02.2014-ன்படி மாதம் ரூ.1000/– வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.12000/– இரண்டு கட்டிடத்திற்கு (Administrative Building and Amenity Building) ரூபாய் 24000/– சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு குத்தகை செலுத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சென்னை மாநகராட்சியின் வசம் ஒப்படைக்க 19–03–2014 நாளிட்ட கடிதத்தில் இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் வரைவு வாடகை ஒப்பந்தத்தில் வீடற்றவர்களுக்கான காப்பகம் (Shelter for Homeless) அமைக்கக் கூடாது என தெரிவித்திருந்தனர். அதன்பின் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செயல் உறுப்பினரை மண்டல அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் உதவி நல அலுவலர் ஆகியோர் நேரில் சந்தித்து மேற்கூறிய கட்டிடங்கள் வீடற்றவர்களுக்கான காப்பகம் அமைப்பதற்காக மட்டுமே வாடகை ஏதுமின்றி வழங்க ஆணையர் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டதை விளக்கியதற்கு பின்னர், உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களிடமிருந்து, அங்கீகரிக்கப்பட்ட வாடகை ஒப்பந்தத்தின் உண்மை நகலினை ஒப்பம் வேண்டியும், சென்னை மாநகராட்சி கட்டிடங்களை மாநகராட்சி தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவும். ரூ.24,719/– (11 மாதங்களுக்கான வாடகை மற்றும் சேவை வரிகள் உட்பட) க்கான வரைவோலையினை "Chief Executive Officer, CMDA" என்ற பெயரில் வழங்கக் கோரியும் கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட (Administrative Building and Amenity Building) பல ஆண்டு காலமாக உபயோகப்படுத்தப்படாமல் இருப்பதால் மேற்படி கட்டிடத்தினை பராமரிப்பு பணி மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. மேலும் அக்கட்டிடத்தினை வீடற்றவர்களுக்கான காப்பகமாக (Shelter for Homeless) மாற்றிட ஏதுவாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே மேற்கண்ட பராமரிப்பு பணிகளுக்கு மதிப்பீடு தோராயமாக ரூ.47,00,000/– (ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சங்கள் மட்டும்) தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (Administrative Building and Amenity Building) சென்னை மாநகராட்சி வசம் பெற்று கொள்வதற்கும்
2. இரண்டு கட்டிடங்களுக்கு (Administrative Building and Amenity Building) குத்தகை ரூ.24,719/– (11 மாதங்களுக்கான வாடகை மற்றும் சேவை வரிகள் உட்பட) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு வரைவோலையினை "Chief Executive Officer, CMDA" என்ற பெயரில் நிலம் மற்றும் உடைமைத் துறை மூலமாக வழங்கிடவும்
3. கட்டிடத்திற்கான மாதந்தோறும் உபயோகப்படுத்தப்படும் மின் கட்டணத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்துவதற்கும்
4. பராமரிப்பு பணிகளுக்கு தேவைப்படும் நிதி ஒதுக்கீடு மற்றும் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கிடவும்
5. ஒவ்வொரு வருடமும் பராமரிப்பு செலவிற்காக தேவைப்படும் காலம் வரை தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் அனுமதி வழங்கிடவும்.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.456/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.வ.அ.ந.க.எண்.இ1/9402 /2014</u>**
**<u>முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 11.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.571/2014 **பொருள் எண்.05**

**<u>மத்திய வட்டார அலுவலகம் – மண்டலம் 6 முதல் 10 வரை உள்ள கோட்டங்களில் சாலைகளில் அமைந்துள்ள சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் அமைக்கும் பணி – உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மூலம் ஏற்பட்ட தணிக்கை தடை நிவர்த்தி செய்யவும் மீண்டும் சென்னை மாநகராட்சி மூலம் கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைக்கும் பணி நடைபெற அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகளில் உள்ள அமைந்துள்ள சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணி சென்னை மாநகராட்சியில் தயாரிக்கப்படும் மதிப்பீட்டில் இடம் பெற்று பணியும் சாலை பணி நடைபெறும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டு பணியின் பட்டியும் தீர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் உள்ளாட்சி தணிக்கைத் துறை தணிக்கை தடை மூலம் பல்வேறு தடைகள் வெளியிட்டு அதற்குரிய செலவீனத்தை சென்னை குடிநீர் வாரிய துறையில் பிடித்தம் செய்ய கோரப்பட்டது. இதே போல் மண்டலம்–6, 9 மற்றும் 10 தணிக்கைத்தடைகள் உள்ளன என தெரிவிக்கப்படுகிறது. மேலும் கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை சென்னை குடிநீர் வாரியமே செய்ய பணிக்கப்பட்டது.

சென்னை குடிநீர் வாரியம் செய்ய வேண்டிய பணி என்பதால் சாலை பணி நடைபெறும் போது சென்னை மாநகராட்சி கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை செய்ய முடியாத காரணத்தால், குறிப்பிட்ட கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் வரும் இடங்களில் ஏற்பட்டுள்ள பள்ளம் மற்றும் மேடுகள், சென்னை குடிநீர் வாரியத் துறை பணி செய்யும் வரை அப்படியே பள்ளம் மேடாக காணப்படுகிறது. பொதுமக்கள், முதியவர்கள் நடந்து செல்லும் போதும் இருசக்கர வாகனங்கள் குறிப்பிட்ட கழிவுகள் அகற்றும் வழி / துவாரத்தை கடந்து செல்லும் போதும் பல சிரமங்கள் உள்ளன. முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களும் மற்றும் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களும் தங்கள் கலந்தாய்வு கூட்டத்திலும் சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை சென்னை மாநகராட்சியே செய்ய வலியுறுத்தப்பட்டது. பொது மக்கள் குறைகள் தீர்க்கும் சென்னை மாநகராட்சி இணையத்தளத்திலும் வணக்கத்திற்குரிய மேயர் குறைத் தீர்க்கும் மனுவிலும் மற்றும் தினசரியிலும் வெளிவந்துள்ளது. இந்நிலையில் குடிநீர் வாரியம் பணி செய்ய காலதாமதம் ஆகும் நிலையில் கழிவுகள் அகற்றும் வழி / துவாரத்தை சுற்றியுள்ள இடத்தில் மிகுந்த சேதம் உள்ளாகி, அடைப்பு ஏற்பட்டு வெளிவரும் கழிவு நீரால் சாலை பழுதாகும் சூழ்நிலை உள்ளது.

பழைய தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளும் தற்போது நடைப்பெற்றுவரும் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை மண்டல அளவில் நடைபெற்றால், பல சாலைகள் இந்த பிரச்சனையில் இருந்து தீர்வடையும். மேலும், தற்போது தயாரிக்கப்படும் மதிப்பீடுகளில் கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தலுக்கான இனத்தை சேர்க்க வேண்டும். மேலும் அனைத்து சாலைகளும் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதால் இப்பணியை சென்னை மாநகராட்சியே மேற்கொள்ளவும், ஏற்கனவே சென்னை மாநகராட்சி சென்னை குடிநீர் வாரியத்திற்கும், சென்னை குடிநீர் வாரியம் சென்னை மாநகராட்சிக்கும் பரஸ்பர வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மாநராட்சியில் உள்ள பழைய தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளும் தற்போது நடைப்பெற்றுவரும் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை மண்டல அளவில் செய்யவும்,

2. மேலும் இனிவரும் காலங்களில் வரும் புதிய மதிப்பீடுகள் தயார் செய்யும் போது கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணிக்கான இனத்தை சேர்க்கவும்,
3. சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டமைக்காக உள்ளாட்சி தணிக்கை துறை சுட்டிகாட்டியுள்ள அனைத்து தணிகை தடைககளை நிவர்த்தி செய்யவும், சென்னை குடிநீர் வாரிய கழிவுகள் அகற்றும் வழி / துவாரம் உயர்த்துதல் மற்றும் குறைத்தல் பணியை சென்னை மாநகராட்சி செய்யவும்,

மேற்கூறிய 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.444/2014, நாள்.17.11.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.453/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1ந.க.எண்.பி1/005388/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 31–10–14 நாளிட்ட டகுறிப்பு**

தீர்மான எண்.572/2014 **பொருள் எண்.06**

**மண்டலம்–1, பகுதி–1,வார்டு–1,2 மற்றும் 4ல் உள்ள பழுதடைந்த பள்ளி மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, பகுதி–1, வார்டு–1, 2 மற்றும் 4ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி கட்டிடம் மற்றும் அங்கன்வாடி கட்டிடம் பயன்படுத்த முடியாத அளவு பழுதடைந்து எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலையில் உள்ளது. எனவே, இப்பாழ்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்துவது அவசரம் மற்றும் அவசியமான செயலாகும். இதன்அருகிலேயே பயன்பாட்டில் உள்ள பள்ளி கட்டிடம் இருப்பதால் வேறு ஏதும் கட்டிடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. இக்கட்டிடங்கள் அப்போதைய திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. இதனுடைய தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் அனைத்து விவரங்களும் வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண்–1 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–1ல் காமராஜர் நகர் 3வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1970ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 102.83 ச.மீ + முதல் தளம் 99.15 ச.மீ =201.98 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 270 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.6790/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | இதன் அருகிலேயே பயன்பாட்டில் உள்ள பள்ளி கட்டிடம் இருப்பதால் வேறு ஏதும் கட்டிடம் கட்ட தற்போது உத்தேசம் இல்லை. சுற்று சுவர் கட்டி பாதுகாக்கப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.926, நாள் 12.02.2014 |

| வரிசை எண் | வார்டு எண்–2 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–2ல் சின்ன குப்பம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1988ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 72சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 112 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.4790/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக நவீன வசதியுடன் கூடிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.927, நாள் 12.02.2014 |

| வரிசை எண் | வார்டு எண்–2 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–2ல் வள்ளுவர் நகரில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1998ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 42+25 சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 67 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.7710/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக நவீன வசதியுடன் கூடிய அங்கன்வாடி கட்டிடம் கட்டப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.928, நாள் 12.02.2014 |

| வரிசை எண் | வார்டு எண்–2 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–2ல் காமராஜர் நகர் 5வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1983ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் 104 சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 500 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.8790/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | இதன் அருகிலேயே பயன்பாட்டில் உள்ள பள்ளி கட்டிடம் இருப்பதால் வேறு ஏதும் கட்டிடம் கட்ட தற்போது உத்தேசம் இல்லை. சுற்று சுவர் கட்டி பாதுகாக்கப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.929, நாள் 12.02.2014 |

| வரிசை எண் | வார்டு எண்–4 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–4ல் இராமநாதபுரம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1983ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாகஎவ்வளவு ? | தரைதளம் 219 சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 530 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.8790/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | இதன் அருகிலேயே பயன்பாட்டில் உள்ள பள்ளி கட்டிடம் இருப்பதால் வேறு ஏதும் கட்டிடம் கட்ட தற்போது உத்தேசம் இல்லை. சுற்று சுவர் கட்டி பாதுகாக்கப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பாந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்/1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.935, நாள் 12.02.2014 |

எனவே, மண்டலம்–1, வார்டு–1, 2 மற்றும் 4ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்த முடியாத அளவு பழுதடைந்து எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலையில் உள்ள பள்ளி மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 14.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 17.11.2014 அன்று தீர்மான எண்.34/2014ன்படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.447/14 நாள்.17.11.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/1695/2012**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 30.09.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.573/2014 **பொருள் எண்.07**

**இணையதளம் மூலம் சொத்துவரி செலுத்துதல்**

சென்னை மாநகராட்சிக்கான பல்வேறு வருவாய் இனங்களில் சொத்துவரியின் மூலம் பெறப்படும் வருவாய் பிரதான வருவாய் ஆகும்.

தற்போது சொத்துவரி வசூல் கீழ்கண்டவகைகளில் செய்யப்படுகிறது

- வரி வசூலிப்பாளர்கள் மூலம்,
- மண்டல அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தகவல் மையங்கள் மூலம்,
- சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் தகவல் மையம் மூலம்,
- எலக்ட்ரானிக்ஸ் கிளியரிங் மூலம் சொத்துவரி செலுத்துவோரின் இசைவினை உரிய படிவத்தின் மூலம் பெற்று ஆறு மாதத்திற்கு ஒரு முறை வங்கியின் மூலம் வசூலிக்கும் முறை),
- வங்கிகள் மூலம் சொத்துவரி செலுத்திடும் நடைமுறை.

மேற்கண்ட முறைகளுடன் சென்னை மாநகராட்சியின் இணைய தள வசதியினை பயன்படுத்தி கடன் அட்டைகள் மூலம் (Credit card/debit card/cash card) சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரியினை செலுத்திடும் நடைமுறை உள்ளது.

பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, இணையதள வசதியினை பயன்படுத்தி சொத்துவரி செலுத்துவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. இணைய தள வசதியினை பயன்படுத்தி சொத்துவரி வசூல் செய்யும் இந்நடைமுறையானது இந்தியாஐடியாஸ் என்ற ஒப்பந்ததாரர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஒப்பந்தப் புள்ளி மூலமாக தெரிவு செய்யப்பட்ட இந்நிறுவனம் கீழ்கண்டவாறு தனது சேவைக்கான கட்டணத்தினை வசூலிக்கிறது.

| வரிசை எண். | சேவை விவரம் | கட்டண விவரம் | குறிப்புரை |
|---|---|---|---|
| 1 | ECS | ரூ.3/— ஒவ்வொரு பரிமாற்றத்திற்கு | சென்னை மாநகராட்சியால் நிறுவனத்திற்கு கட்டணம் அளிக்கப்படுகிறது. |
| 2 | EBPP | ரூ.3/— ஒவ்வொரு பரிமாற்றத்திற்கு | சென்னை மாநகராட்சியால் நிறுவனத்திற்கு கட்டணம் அளிக்கப்படுகிறது. |
| 3 | Gateway for net banking | ரூ.5/— ஒவ்வொரு பரிமாற்றத்திற்கு | சென்னை மாநகராட்சியால் நிறுவனத்திற்கு கட்டணம் அளிக்கப்படுகிறது. |
| 4 | Gate way for Credit/Debit card | பணம் பரிமாற்றம் செய்யப்படும் தொகையில் 1.75 விழுக்காடு | சொத்துவரி செலுத்துவோரிடமிருந்து நேரடியாக நிறுவனத்தினால் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. |
| 5 | Card Bill pay (like ITZ Cash card) | பணம் பரிமாற்றம் செய்யப்படும் தொகையில் 1.75 விழுக்காடு | சொத்துவரி செலுத்துவோரிடமிருந்து நேரடியாக நிறுவனத்தினால் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. |

இணைய தளவசதியினை பயன்படுத்தி சொத்துவரி செலுத்திடும் நடைமுறையால்

- சென்னை மாநகராட்சிக்கான சொத்துவரி வசூல் அதிகரிக்கிறது,
- சென்னை மாநகராட்சிக்கான பணியமைப்பு செலவு குறைகிறது,
- சொத்துவரி செலுத்திடுவோருக்கு மிகவும் எளிமையான நடைமுறையாக அமைகிறது.

மேற்படி திட்டத்தில், ஒப்பந்ததாரர் நிறுவனமானது தனது சேவைக்காக குறிப்பிட்ட கட்டணத்தினை வசூலிப்பதால், சொத்துவரி செலுத்துவோர், சொத்துவரி தொகையுடன் கூடுதலாக சேவைக் கட்டணத்தினை செலுத்தவேண்டியுள்ளது.

சேவைக் கட்டணம் ஏதுமில்லாமல் இலவசமாக பணபரிவர்த்தனையினை செய்யும் வசதியினை ஏற்படுத்தினால், சொத்துவரி செலுத்துவோர் கூடுதல் செலவு ஏதுமில்லாமல் எவ்வித சிரமுமின்றி சொத்துவரியினை சென்னை மாநகராட்சிக்கு செலுத்திடுவர்.

எனவே, மேற்குறிப்பிட்ட சேவையினை இலவசமாக அளிக்க வங்கிகளை கோரியதில், மேற்குறிப்பிட்ட சேவைகளை கட்டணங்கள் ஏதுமின்றி இலவசமாக வழங்க ஐசிஐசிஐ வங்கி, ஐடிபிஐ வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் இந்தஸ்இந்த் வங்கி ஆகியவை தங்களது விருப்பத்தினை அளித்துள்ளன.

1) மேற்குறிப்பிட்ட சேவைகளை, சேவைக்கான கட்டணங்கள் ஏதுமின்றி இலவசமாக வழங்க முன்வரும் வங்கிகள் மூலமாகவும் மேற்கொள்ளவும்,
2) வங்கிகள் மூலமாக சேவையினை துவக்கிய பின்னர், தற்போது இச்சேவையினை வழங்கிவரும் ஒப்பந்ததாரர் நிறுவனமான இந்தியா ஐடியாஸ் என்ற நிறுவனத்துடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தினை முடித்துக்கொள்ளவும்

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.458/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/9536/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 15.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.574/2014 **பொருள் எண்.08**

**பொதுக் கழிப்பிடங்களில் விளம்பரப்பலகைகள் வைக்க அனுமதி**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.232 மற்றும் 415–ன்படி, சென்னை மாநகராட்சியால் பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு இடங்களில் இலவச பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.223எ–ல், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரங்களை மேற்கொள்ளும் வகையில் வழிவகையினை ஏற்படுத்திக்கொள்ளவும், இவ்விடங்களில் விளம்பரங்களை செய்ய, கட்டணத்தினை வசூலித்துக் கொண்டு அனுமதி வழங்கிடவும் சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.37ல், சட்டப்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை பயன்படுத்தி, விளம்பரங்கள் மூலமாக, உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வருவாயினை பெருக்கிக்கொள்ளலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பரிந்துரையானது தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடக் கட்டடங்களில் விளம்பரப்பலகைகளை வைக்க அனுமதி வழங்குவதன் மூலம், அனுமதிக் கட்டணம் மூலமாகவும், விளம்பர வரி மூலமாகவும் சென்னை மாநகராட்சிக்கான வருவாயினை பெருக்கிடலாம்.

அரசு ஆணை எண்.230, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.09.2008ன்படி, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்களில் 3 மீட்டர் x 9 மீட்டர் (குறுக்குவாட்டில்) என்ற அளவில் விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ள அனுமதி வழங்கும்வகையில் சென்னை மாநகர முனிசிபல் விளம்பரப் பலகைகள் வைத்தல் மற்றும் விளம்பர வரி வசூலித்தல் விதிகள், 2003ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

சேவை வரித் துறையின், 22.06.2006 நாளிட்ட கடிதத்தில், விளம்பரங்கள் செய்வதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்யும் நிகழ்வில், சேவைவரியினையும் சேர்த்து வசூலிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக் கழிப்பிடங்களில் விளம்பரப்பலகைகளை 3 மீட்டர் x 9 மீட்டர் (குறுக்குவாட்டில்) என்ற அளவிற்கு மிகாமல் ஓராண்டு காலத்திற்கு வைத்துக்கொள்ள பொது ஏல முறையினை பின்பற்றி அனுமதி வழங்கிடவும்,
2) அனுமதிக் கட்டணம், சேவை வரி மற்றும் விளம்பரப்பலகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு விளம்பரவரி ஆகியவற்றை வசூலித்திடவும்,
3) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு, விளம்பரப்பலகைகளை வைப்பது குறித்து சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, விரிவான அறிக்கையினை தயாரித்திட, ஒரு கலந்தாலோசகரை (consultant) சட்டப்படி நியமித்திடவும்

நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.459/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.நக.எண்.பி15/ 37272/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.11.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.575/2014 **பொருள் எண்.09**

**<u>ஓய்வூதியம் – அகவிலைப்படி 01.07.2014 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி சென்னை மாநகராட்சி ஓய்வூதிர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி</u>**

அரசாணை எண். 246 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள். 10.10.2014ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.07.2014 முதல் அகவிலைப்படி 100 விழுக்காட்டிலிருந்து 107 விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 17205 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.57.28 இலட்சம் கூடுதல் செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு (01.07.2014 முதல் 31.03.2015 வரை) மட்டும் செலவாகும் கூடுதல் தொகை ரூ.5.15 கோடி ஆகும்.

அரசாணை எண்.246, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்.10.10.2014–ன் படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 100 விழுக்காட்டிலிருந்து 107 விழுக்காடாக உயர்த்தி சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.460/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.வ.அ.நக.எண்.இ3/0876/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.576/2014 **பொருள் எண்.10**

**மத்திய வட்டார அலுவலகம் கட்டிடம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் துறை – மண்டலம்–6, பகுதி–17, வார்டு–73ல் ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் புதிய மண்டல அலுவலகம் கட்டும் பணிக்கு – மதிப்பீட்டிற்கு பெறப்பட்ட மன்றத் தீர்மானத்தை ரத்து செய்து 2014–15 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.9.20 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதி**

மண்டலம்–6, பகுதி–17, வார்டு–73ல் ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் புதிய மண்டல அலுவலகம், கட்டும் பணிக்கு மன்ற தீர்மான எண்.385/2014, நாள்: 22.07.2014ன்படி ரூ.7.95 கோடி மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டது.

இந்நிலையில் இப்பணியில் மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் கட்டுமான வடிவமைப்பில் அஸ்திவாரம் Pile foundation ஆக மாற்றப்பட வேண்டியதின் காரணமாகவும், இயங்கு ஏணி **(Lift),** மின் ஆக்கி அறை மற்றும் மின் ஆக்கி **(Generator),** இம்மதிப்பீட்டில் சேர்க்கப்படாததாலும் இப்பணிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்க வேண்டியுள்ளது.

2013–14ன் விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடான ரூ.7.95 கோடியை ரத்து செய்து மறு மதிப்பீடு தயாரிப்பதற்கு மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன்படி மறுமதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் விவரம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | மண்டலம்–6 பகுதி–17 வார்டு–73ல், ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் புதிய மண்டல அலுவலகம்–6 கட்டும் பணி. |
| 2. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | கட்டிடம், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை மத்திய வட்டார அலுவலகம் |
| 3. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | : | தலைமைப் பொறியாளர் (க(ம)பா.)C.E(B & Br.) T.S.No. 2013-14 நாள்: |
| 4. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை | : | 2014-15 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது. |
| 5. மதிப்பீட்டின் தொகை | : | |
| அ) கட்டுமான பணி செலவினம் | : | ரூ.7,53,22,329.83 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு – 10% | : | ரூ. 75,20,678.28 |
| இ) சிறு மேற்பார்வை செலவு – 2.5% | : | ரூ. 18,80,169.57 |
| ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 7,52,067.83 |
| உ) மற்றைய எதிர்பாரா செலவு – 2.5% | : | ரூ. 18,72,686.66 |
| ஊ) மின்சார இணைப்பு | : | ரூ. 1,00,000.00 |
| எ) வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் 5 % | : | ரூ. 38,00,000.00 |
| ஏ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் பொது வைப்பு நிதி – 1 % | : | ரூ. 7,52,067.83 |
| மொத்தம் | : | ரூ. 9,20,00,000.00 |
| 6. கட்டப்படும் கட்டிடத்தின் அளவு | | |
| தரைதளம் | : | 712 சதுர மீட்டர் |
| முதல் தளம் | : | 885 சதுர மீட்டர் |
| இரண்டாம் தளம் | : | 885 சதுர மீட்டர் |
| மூன்றாம் தளம் | : | 838 சதுர மீட்டர் |
| நான்காம் தளம் | : | 437 சதுர மீட்டர் |
| மொத்த பரப்பளவு | : | 3757 சதுர மீட்டர் |

| | | |
|---|---|---|
| 7. அ. கட்டுமான பணி செலவினம் | : | ரூ.7.54 கோடி |
| ஆ. ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ.21,000/– (ஒரு சதுர மீட்டருக்கு தோராயமாக) |
| 8. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 9. மதுப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண்.மற்றும் தேதி | | வார்டு குழு–6 தீர்மான எண். 102, நாள்: 13.11.2013 |
| 10. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 11. நிதியின் மூலத்தன்மை | : | மூலதன பணி |
| 12. இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.9.20 கோடி |

இப்பணிக்காக 2013–14 விலை மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ.7.95 மதிப்பீட்டிற்கு ஏற்கனவே ஒப்புதல் பெற்றதை ரத்து செய்யவும், 22–7–14 அன்று பெறப்பட்ட மன்றத் தீர்மானத்தை ரத்து செய்து 2014–2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.9.20 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே இருபது இலட்சம் மட்டும்) க்கு தயாரிக்கப்பட்டுள்ள திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்:26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட விதி 78 (பி)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.449/14 நாள் 17.11.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.462/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.வ.அ.ந.க..எண்.இ3/ 1776 /2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.577/2014 **பொருள் எண்.11**

**மத்திய வட்டார அலுவலகம்– கட்டிடம்– பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் துறை – மண்டலம்–8 – வார்டு– 105-ல், எம்.எம்.டி.ஏ காலனி பிரதான சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்கு – 2014–15 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.3.15 கோடிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி**

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | மண்டலம்–8 – வார்டு–105-ல், எம்.எம்.டி.ஏ காலனி பிரதான சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணி |
| 2. பரிந்துரை செய்தவரின் விவரம் | : | 1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2014–15ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 71<br>2. அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் 105வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆகியோர்களின் பரிந்துரைப்படி. |
| 3. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | கட்டிடம், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை, மத்திய வட்டார அலுவலகம். |
| 4. தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | : | தலைமை பொறியாளர் (க(ம)ம.நீ.வ.து.) C.E(B &SWD.) T.S.No. 008 Blg / 2014-15 |
| 5. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை | : | 2014–15 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டது. |
| 6. மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 3,15,00000.00 |
| அ) கட்டுமானபணி செலவினம் | : | ரூ.2,65,517,22.76 |
| ஆ) மேலான மேல்பார்வை செலவு | : | ரூ.26,55,172.28 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ.6,63,793.07 |
| ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | | ரூ.5,98,277.43 |
| உ) மின்சாரம் இணைப்பு | : | ரூ.1,00,000.00 |
| ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் | : | ரூ.2,65,517.23 |
| பொது வைப்பு நிதி -1% | : | ரூ.2,65,517.23 |
| எ) தரக்கட்டுபாடு | | |
| ஏ) வரைப்படம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் | : | ரூ. 4,00,000.00 |
| மொத்தம் | : | ரூ. 3,15,00000.00 |
| 7. மொத்த பரப்பளவு | : | 1212.93சதுர மீட்டர் |
| 8. ஒரு சதுர மீட்ருக்கு ஆகும் செலவு | : | ரூ.21,895/ சதுர மீட்டர் |
| 9. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 10. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 12. நிதியின் மூலத் தன்மை | : | மூலதன பணி |
| 13. இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | 3,15,00,000.00 |

மேற்கண்ட பணிக்கு 2014–15 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ. 3,15,00,000.00 (ரூபாய் மூன்று கோடியே பதினைந்து லட்சம் மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008 நாள்.26.08.2008–ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின் படி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட 78ன் (பி)ன்படி, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 17.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.450/2014ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.465/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ப.து.சி.தி,ந.க.எண். பி1/3450/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 15.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.578/2014 **பொருள் எண்.12**

**சிறப்பு திட்டங்கள் துறை – மதிப்பீடு – 2014–2015ம் ஆண்டிற்கான பணி – மண்டலம்– 9, வார்டு எண்.124 –ல் உள்ள மயிலாப்பூர் கோயில் தெருவில் உள்ள கோயில் குளம் சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணிக்கு – 2014–2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடு ரூ.5,65,00,000/– நிர்வாக அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்

| வ. எண் | மண்டலம் /வார்டு எண் | பணி / சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் மீ. | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | 9 /124 | மயிலாப்பூர் கோயில் தெரு | நடைபாதை அமைக்கும் பணி | 2150 | 6450 | 5,65,00,000 |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மேற்பார்வைபொறியாளர் /சிறப்பு திட்டங்கள் |
| 03 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | சிறப்பு திட்டங்கள் துறை |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம், அளிக்கப்பட்டது |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) எண்: T.S.No.25/2014–15, நாள்.09.10.2014 |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014 – 2015 |
| 07 | மதிப்பீட்டின் தொகை : | | |
| | (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.4,39,89,241.08 |
| | (ஆ) மேலான செலவீனம் மட்டும் | : | ரூ. 43,98,924.11 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 10,99,731.03 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 11,32,318.96 |
| | (உ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 4,39,892.41 |
| | (ஊ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. 4,39,892.41 |
| | (எ) சர்வீஸ் லைன் மாற்றும் செலவு | : | ரூ. 50,00,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 5,65,00,000.00 |
| 08 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ. 8759.69 / ச.மீ |
| 09 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 10 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள் | : | வார்டு குழுவின் தீர்மானம் பின்னர் பெறப்படும். |
| 11 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 12 | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| 13 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | 565.00 இலட்சங்கள் |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக 2014—2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.5,65,00,000/—க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்பளிப்பு வேண்டி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி 78(பி)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“17.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.448/14 நாள் 17.11.2014—ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.461/2014, நாள்.18.11.2014—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மி. து.ந.க.எண்சி.மே2/ பி3/ 7887/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 18–11–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.579/2014 **பொருள் எண்.13**

**மறு மின்னனு ஒப்பம் – தெருவிளக்கு கண்காணிப்பு முறை – 1000 தெருவிளக்குகளிள் புதிதாக தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பு பொருத்தி இயக்கி வைக்க – 27.06.2014 அன்று தொழில் நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது – 08.08.2014 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டது – M/s Crompton Greaves Ltd செயல் விளக்கம் திருப்திகரமாக இல்லை – ஒப்பங்கள் நிராகரிக்க பரிந்துரைத்தல் –அனுமதி**

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | தெருவிளக்கு கண்காணிப்பு முறை – 1000 தெருவிளக்குகளிள் புதிதாக தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பு பொருத்தி இயக்கி வைக்க |
| 2 | மதிப்பீடு | ரூ. 2,26,00,000/- |
| 3 | தேவைப்படும் இடம் | சென்னை மாநகராட்சி |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | 22.05.2014 |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | 22.05.2014– தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், நமது எம். ஜ. ஆர், |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | – |
| 7 | ஒப்பத்தில் பங்குபெறுவதற்கான இறுதி நாள் | 27.06.2014 |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 27.06.2014 |
| ஆ | ஒப்பம் திறக்கப்பட்ட நாள் | 27.06.2014 |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் முலம் இந்த ஒப்பத்தில் பங்கேற்றனர் |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | 4 |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | ரூ. 226000/- |

**13 ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்**

| Sl no | Criteria | Air System Limited | Citelum India (P) Ltd | Crompton Greaves Ltd | Philips India Ltd |
|---|---|---|---|---|---|
| 1 | EMD / NSIC / Bank guarantee: | Bank Guarantee Rs.226000/- Punjab National Bank Abhiramapuram, Valid Upto:28.12.2014 B.G.No. 422811G000514,Dt;27.06.2014 | State bank of India New Delhi Branch DD NO: 148067 dt : 26.06.2014 Amount : 226000/- | Bank Guarantee Rs. 226000/- Canara Bank.Kodambakkam Chennai Valid Upto: 31.12.2014. | Bank Guarantee Rs.226000/- Citi Bank N.A, Chennai, Valid Upto:18.12.2014 B.G.No. 5556601027,Dt;20.06.2014 |
| 2 | Exemption from payment of EMD | EMD PAID | EMD PAID | PAID EMD | PAID EMD |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ISI / ISO Certificate | Not submitted | Not submitted | ISO submitted. The design development procurement and supply of Luminaires and lighting elctronics for domestic commerical industrial area lighting and specilised aapplications such as hazardous areas and corrisive atmoshpere for domestic and export markets. Techonologies involed include computer aided light measurment computer aided lighting scheme desigh computer aided solid modelling and drafting testing of luminaries light source and lighting electroknics. valid till 03.04.2016 | ISO submitted. The management invoation marketing manufacturing sales and supply of lighting devices solutions asd services valid till 01.03.2015 |
| 4 | Manufacturer | Air System Limited - submitted | Not submitted | Incorporation submitted | Incorporation submitted |
| 5 | Authorised dealer | JVP partner of M/s Instruments Universal | Not submitted | | |
| | | | Not submitted | | |
| 6 | Proof of the applicant should have working | Not submitted | | | |
| | capital sufficient to finance at least 25% of value of tender.[Working capital will be calculated by adding the amount available in the bank account of the applicant on the date of submission of application and the unutilized amount of overdraft / credit facility extended to the applicant by the Nationalized / Scheduled banks] enclosed? | | Not submitted | Letter from Bank of Maharastra dt: 25.06.2014 stating total limit is Rs: 517 cr and utilized is Rs: 334.82 cr | Letter from Citi bank dt: 27.03.2014 stating total balance is Rs: 200cr. NOT AS ON DATE |
| 7 | Latest TIN return enclosed | Not submitted | Not submitted | submitted may 2014 & June 2014 | submitted may 2014 |
| 8 | Power of attorney / Authorization for | | Not submitted | | |
| | •Persons signing the Tender | Mr.DK Agarwal | | Mr. N .Purushothaman | Mr. S. Karthick |
| | •For Partner – in-charge | | | | |
| | | | | | |
| 9 | Declare the quantity you can supply out of the tender quantity | Not submitted | Not submitted | Letter of CG stating that they can supply for 1000 nos | Letter of Philips stating that they can supply tender qty |
| 10 | Brand and model | | Not submitted | | |
| | Annexure | A,B, D, E,G | Not submitted | G, C. | Submitted A,B, D,E,F,G |
| 11 | Technical details supporting the technical specification | | Not submitted | submitted | submitted |

மின்னனு ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணம் 27.06.2014 அன்று திறக்கப்பட்டு பரிசிலிக்கப்பட்டது. 1. Air System Ltd and 2. Citelum India (P) Ltd நிறுவனங்கள் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதி (eligible criteria conditions) பெருவதற்கான ஆவணங்கள் அளிக்கவில்லை. மேலும் 3. Crompton Greaves Ltd and 4. Philips India Ltd, நிறுவனங்கள் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதிக்கான ஆவணங்கள் (eligible criteria conditions) அளித்துள்ளன.

மின்னனு ஒப்பத்தில் பங்குபெற்ற 4 நிறுவனங்களிள் ஒப்பங்கள் பரிசீலிக்கப்ட்டு கோப்புகள் ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்காக 05.08.2014 அன்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தில் 1. Air System Ltd and 2. Citelum India (P) Ltd நிறுவனங்களின் ஒப்பங்களை போதிய ஆவணங்கள் சமர்பிக்காத காரணத்திற்காக நிராகரித்து தகுதிபெற்ற Crompton Greaves Ltd மற்றும் Philips India Ltd நிறுவனங்களின் நிதி ஆவணம் திறக்க அனுமதி அளிக்கப்பட்டது.

Crompton Greaves Ltd மற்றும் Philips India Ltd நிறுவனங்களின் நிதி ஆவணம் 08.08.2014 அன்று திறக்கப்பட்டது,

| Sl. No | Description of Work / Item (S) | No.of Qty. | Units | PHILIPS INDIA LTD | | CROMPTON GREAVES LIMITED | | PHILIPS INDIA LTD | | CROMPTON GREAVES LIMITED | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | QUOTED RATE | | QUOTED RATE | | QUOTED AMOUNT | | QUOTED AMOUNT | |
| | | | | Basic Price | Tax | Basic Price | Tax | Amount WithOut Tax | Amount With Tax | Amount WithOut Tax | Amount With Tax |
| 1 | Supply, Installation and commissioning of Street Light Monitoring System for 1000 individual lamp post in Chennai corporation as per specification | 1000 | Nos | 16375.27 | 2374.41 | 14130.00 | 2049.00 | 1,63,75,270.00 | 1,87,49,680.00 | 1,41,30,000.00 | 1,61,79,000.00 |
| 2 | Operate and Maintain of Street Light Monitoring System for 1000 individual lamp post in Chennai corporation for one year as per specification | 1000 | Nos | 2450.00 | 302.82 | 3963.60 | 490.00 | 24,50,000.00 | 27,52,820.00 | 39,63,600.00 | 44,53,600.00 |
| | TOTAL | | | | | | | | 21502500.00 | | 20632600.00 |

Crompton Greaves Ltd நிறுவனம் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ளது. விலை குறைப்பு கேட்டு Crompton Greaves Ltd நிறுவனத்திற்கு 14.08.2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கிணங்க Crompton Greaves Ltd நிறுவனம் 18.08.2014 நாளிட்ட கடிதம் முலம் விலைகுறைப்பு செய்துள்ளது.

| Sl No | Description of Work / Item (S) | No.of Qty. | Units | Crompton greaves limited | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | QUOTED RATE | | | | REDUCED RATE | | |
| | | | | Basic Price | Tax | Amount WithOut Tax | Amount With Tax | Basic Price | Tax | Total Amount including tax |
| 1 | Supply, Installation and commissioning of Street Light Monitoring System for 1000 individual lamp post in Chennai corporation as per specification | 1000 | Nos | 14130.00 | 2049.00 | 1,41,30,000.00 | 1,61,79,000.00 | 14100.00 | 2044.50 | 16144500.00 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | **Operate and Maintain of Street Light Monitoring System for 1000 individual lamp post in Chennai corporation for one year as per specification** | 1000 | Nos | 3963.60 | 490.00 | 39,63,600.00 | 44,53,600.00 | 3950.00 | 488.22 | 4438220.00 |
| | TOTAL | | | | | | **20632600.00** | | | **20582720.00** |

Crompton Greaves Ltd நிறுவனத்திற்கு 19.08.2014 அன்று கடிதம் முலம் தங்களின் தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பின் செயல் விளக்கம் அளிக்குமாறு கோரப்பட்டது. நிறுவனத்தின் தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பின் செயல் பரிசீலிக்க கோட்ட மின் பொறியாளர் / மையம், உதவி கோட்ட மின் பொறியாளர் மண்டலம் 10, உதவி கோட்ட மின் பொறியாளர் மண்டலம் 15, உதவி கோட்ட மின் பொறியாளர் மண்டலம்03 அடங்கிய குழு அமைக்கப்பட்டது. Crompton Greaves Ltd நிறுவனம் குழுவின் முன்னிலையில் பரிசோதனை மற்றும் செயல் விளக்கம் அளித்தது. பரிசோதனைக்கு பின் குழுவின் 15.10.2014 நாளிட்ட அறிக்கையில் Crompton Greaves Ltd நிறுவனத்தின் தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பின் செயல் ஒப்பங்கள் தொழில்நுட்ப விவரங்களின்படி திருப்திகரமாக இல்லை என அளித்துள்ளனர்.

கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்காக 03.11.2014 அன்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தில் Crompton Greaves Ltd நிறுவனத்தின் தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பின் செயல் ஒப்பத்தின் தொழில்நுட்ப விவரங்களின்படி இல்லாததால் பெறப்பட்ட ஒப்பங்களை நிராகரிக்க பரிந்துரைத்தது

எனவே, சென்னை மாநகராட்சி தெருவிளக்கு கண்காணிப்பு முறை – 1000 தெருவிளக்குகளிள் புதிதாக தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பு பொருத்தி இயக்கி வைக்க கோரப்பட்ட மின்னனு ஒப்பந்தத்தில் குறைந்த குறைக்கப்பட்ட ஒப்பப்புள்ளி அளித்துள்ள Crompton Greaves Ltd நிறுவனத்தின் தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பின் செயல் தொழில்நுட்ப விவரத்தின்படி திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரையின்படி பெறப்பட்ட 4 ஒப்பங்களை நிராகரிக்கவும் மற்றும் மறு மின்னனு ஒப்பம் கோரவும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு7(1) & (2) –ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 17.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.451/2014ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.466/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பா.து.ந.க.எண்.பி3/1684/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18–11–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.580/2014 **பொருள் எண்.14**

**<u>மண்டலம்–6, வார்டு–72ல் உள்ள ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகரையும் இணைக்கும் மீதமுள்ள மேம்பாலம் கட்டுமானப்பணி – ரூ.1,21,00,000/– மதிப்பீட்டிற்கு அனுமதி</u>**

மண்டலம்–6, கோட்டம்–72ல் ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகரையும் இணைக்கும் மேம்பால கட்டுமான பணியினை திருவாளர்கள். கே.ஜி.கன்ஸ்டிரக்ஷன்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத்தொகை ரூ.2,03,30,712.00 ஆகும். ஒப்பந்ததாரருக்கு 11.02.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. பணிக்காலம் 10 மாதங்களாகும். இப்பணி 04.05.2011ல் முடிவடைந்திருக்க வேண்டும்.

இப்பணிக்கான ஒப்பக்காலத்தினை பல்வேறு காரணங்களுக்காக 18.07.2011 வரை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரரால் 18.07.2011 வரை பைல் கேப் (Pile cap) வரை மட்டுமே பணி முடிக்கப்பட்டது. இவ்வேலைக்களுக்கான பட்டித்தொகை ரூ.1,58,57,724/– ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் 18.07.2011 தேதிக்கு மேல் எவ்வித பணிகளும் மேற்கொள்ளவில்லை. பணியினை மீண்டும் துவங்கும்படி பல கடிதங்கள் அனுப்பப்பட்ட பிறகும் ஒப்பந்ததாரர் பணியினை துவங்கவில்லை.

எனவே,

1. ஒப்பந்ததாரர் திருவாளர்.கே.ஜி.கன்ஸ்டிரக்ஷன் அவர்களின் ஒப்பத்தினை ரத்து செய்யவும்,
2. ஒப்பந்ததாரரால் முடிக்கப்படாமல் உள்ள மீதப்பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்து புதிய ஒப்பங்கள் கோரவும்,
3. இப்பணிக்கான நிறுத்தி வைக்கப்பட்ட தொகை (Retention Amount) ரூ.7,92,892/– ஐ பறிமுதல் செய்யவும்

மேலும், கீழ் குறிப்பிட்ட மீதமுள்ள பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | | மண்டலம்–6 வார்டு–72 ல் உள்ள ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ். நகரையும் இணைக்கும் மீதமுள்ள மேம்பாலம் கட்டுமானப்பணி |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | | தலைமை பொறியாளர்(பொது) நாள். 18.11.2014. |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | | 2014 – 2015 |
| 06. மதிப்பீட்டின் தொகை | | | |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. | 99,22,240.00 |
| (ஆ)மேற்பார்வை செலவினம் 10% | : | ரூ. | 9,92,224.00 |
| (இ) சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | : | ரூ. | 2,48,056.00 |
| (ஈ) தரக்கட்டுபாடு 1 % | : | ரூ. | 99,222.40 |
| (உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 % | : | ரூ. | 99,222.40 |
| (ஊ) எதிர்பாரா செலவினம் 2.5% | : | ரூ. | 2,39,035.20 |
| (எ) மின்விளக்குகள் செலவு | : | ரூ. | 5,00,000.00 |
| மொத்தம் | : | ரூ. | 1,21,00,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | | – |

| | | |
|---|---|---|
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2014 – 2015 | : | ரூ. 25,00,00,000/– |
| (ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் |
| (இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) | : | |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.1,21,00,000/– |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,21,00,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 17.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.452/2014ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.467/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.12/பொ.பி/இ1/2368/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.581/2014 **பொருள் எண்.15**

**<u>மண்டலம் 12– உட்பட்ட நெடுஞ்சாலை துறை பராமரிப்பில் உள்ள பழவந்தாங்கல் சுரங்கப்பாதையுடன் சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கிருஷ்ணசாமி சாலையினை இணைத்து நங்கநல்லூர் 5வது முதன்மைச் சாலைகளை அகலப்படுத்துதல்– அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12, வார்டு–164ல் பழவந்தாங்கல் சுரங்கப்பாதை தொடர்ச்சியாக உள்ள சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் அவசியம் மற்றும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்ட நடவடிக்கையான நில எடுப்பு அட்டவணை (Land Plan Schedule) ஆலந்தூர், பழவந்தாங்கல் கிராமம் வார்டு எண். Bக்குட்பட்ட நில அளவை எண்கள் 13,14,15,36,37,43,44,45,46, 48,51/1,51/2,51/3,52,53,55/1,55/2, 1,2,3,4 மற்றும் 5 ஆகியவற்றில் உள்ள தனியார் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்பார்வை பொறியாளர் (சாலைகள் மற்றும் பாலங்கள் துறை) மூலம் தனியார் நிலங்களை நிலமெடுப்பு செய்யும் பட்சத்தில் இணைப்பு சாலையை உருவாக்கி சீரான போக்குவரத்தை ஏற்படுத்தலாம் என பரிந்துரைக்கப்படுகிறது என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடமைத்துறை) அவர்கள் நிலஎடுப்புச் சட்டம் 2013 (No:30 of 2013) சட்டத்தின் கீழ் நிலங்களை கையகப்படுத்தவும் மற்றும் அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பவும் கீழ்காணும் விவரங்கள் வேண்டப்பட்டது.

1. எந்த நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்த வேண்டும் அவற்றின் பயன்பாடு
2. இத்திட்டத்தில் உள்ள சமூக பிரச்சனைகள் ஏதேனும் உள்ளனவா ? இருப்பின் அவற்றின் விவரம்
3. சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்களின் முழுமையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
4. சாலை விரிவாக்கம் தொடர்பாக முதன்மை செயலர்/ஆணையர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் 1. சாலை துறை 2. போக்குவரத்து காவல் துறை 3. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 4. நில உரிமைதாரர்கள் மற்றும் 5. சாலை பயன்படுத்துவோர் ஆகியோரை அமைத்து கூட்டம் நடத்தி அவர்களின் கருத்துக்களை (நில எடுப்பு சட்டம் 30/2013ன்படி பெற வேண்டும்)
5. சாலை விரிவாக்க பணிகள் உட்படும் கிராமம், பிளாக் எண், நகர புல எண்கள், அவற்றின் மொத்த பரப்பு, வகைப்பாடு, விரிவாக்க சாலைக்கு (நில எடுப்பு) தேவைப்படும் பரப்பு நில உரிமைதாரர்கள் பெயர், புல வரைப்படம் மற்றும் கூட்டு வரைப்படங்கள் ஆகியவற்றிற்கான உரிய படிவத்தில் விரிவாக அறிக்கை தாக்கல் செய்யுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடமைத்துறை) அவர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில்
6. இப்பணியினை தனியார் கலந்தங்குரியவர்கள் (Private Consultants) மூலம் மேற்கொள்ளவும் அரசிற்கு பிரேரனைகள் முன்மொழிவுகள் அனுப்பவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விரிவாக்க பணிகளை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்,

எனவே, மேற்கண்ட பணியினை செயல்படுத்த 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (நிதி மற்றும் வரிவிதிப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 17.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.453/2014ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.468/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/3737/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.582/2014 **பொருள் எண்.16**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–8, அமைந்தகரை வட்டம் பெரிய கூடல் கிராமம் பிளாக் எண்.17 புல எண்.20–ல் புதிய அமைந்தகரை வட்டத்திற்கு வட்டாட்சியர் அலுவலக கட்டிடம் கட்ட– காலி நிலம் ஒதுக்கீடு–முன் நுழைவு அனுமதி**

சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் சென்னை மாவட்டத்தில் இயங்கி வந்த ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களை சீரமைத்து பத்து வட்டாட்சியர் அலுவலகங்களாக பிரித்து உத்தரவிட்டதன் பேரில் கடந்த 12.02.2014 அன்று புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் செயல்பட துவங்கியுள்ளன. தற்போழுது புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைந்தகரை கோயம்பேடு, குறுங்காலீஸ்வரர் கோயில் மேற்கு மாட வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமானக் கட்டிடத்தில் வாடகையில் இயங்கி வருகிறது என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் புதியதாகத் துவங்கவுள்ள வட்டங்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்படும் என அறிவித்ததையடுத்து அதற்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளதாகவும், வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் அமைந்தகரை வட்டாட்சியர் அலுவலகத்திற்காக அமைந்தகரை வட்டம், பெரிய கூடல் கிராமம், பிளாக் எண்,17 புல எண்.20 4.79.28.0 எக்டரில் 5 கிரவுண்டு 1298 சதுர அடி (13298சதுர அடி) நிலத்தில் நிரந்தரமாக கட்டிடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி, அமைந்தகரை வட்ட அலுவலகத்திற்காக தேர்வு செய்யப்பட்ட புலம் நிரந்தர நிலப்பதிவேட்டின்படி பெரியகூடல் கிராமம், பிளாக் எண்.17, நகர புல எண்.20 ( பழைய புல 27 பா, 28பா, 20/4A, 20/3A, பா, எண்.29/1A,30/1A) விஸ்தீரணம் 4.79.28.0 வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு , அடங்கல் பயன்பாடு, ஷரா கலத்தில் காலி – சென்னை மாநகராட்சி எனவும் பதிவுள்ளதால் சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் இசைவினை பெற்று வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறை மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் 07.11.2014 அன்று கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொண்டனர். இத்தணிக்கைக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

வடக்கு – காலி மனை

மேற்கு – கஜலெட்சுமி காலனி வீடுகள் ஆக்கிரமணம்

தெற்கு – கஜலெட்சுமி காலனி பாதை மற்றும் வீடுகள் ஆக்கிரமணம்

கிழக்கு – மேற்கு ஷெனாய் நகர் பிரதான சாலை

மேற்படி புலத்தில் வடக்கு 62.4 மீ, தெற்கு 62.4 மீ, கிழக்கு 19.8 மீ மற்றும் மேற்கு 19.8 மீ அளவில் 5 கிரவுண்டு 1298 சதுர அடி (0.12.35.5 சமீ) பரப்பளவு கொண்டதாக உள்ளது. மேலும் புலத்தின் மீதமுள்ள பரப்பில் ஒரு பகுதியில் தெற்கு மற்றும் மேற்கு பகுதி கஜலெட்சுமி காலனி என்ற பெயரில் வீடுகளால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளது. அமைந்தகரை நகரத்திற்கு அருகாமையில் மேற்படி புலம் அமைந்துள்ளது. மேற்படி புலத்தில் வட்டாட்சியர் அலுவலக கட்டிடம் அமையப்பெற்றால் பொதுமக்கள் எளிதில் வந்து செல்வதற்கு போக்குவரத்து வசதி உள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 08.11.2014 நாளிட்ட கடிதத்தில் மேற்படி இடத்தில் அமைந்தகரை வட்டாட்சியர் அலுவலகம் கட்ட மேற்படி நிலத்தை வருவாய் துறைக்கு நிலக்கிரயம் இன்றி நிலமாற்றம் செய்ய சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் இசைவினை பெற்று அளிக்குமாறு கோரியுள்ளார். மேற்படி நிலத்தின் சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.11,000/– ஆகும். இதன் அடிப்படையில் 13,298 சதுர அடிக்கு ரூ.14,62,78,000 (பதினான்கு கோடியே அறுபத்தி இலட்சத்து எழுபத்தி எட்டாயிரம்) என நில மதிப்பாகிறது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்தகரை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கும் முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கும் நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.464/2014, நாள்.18.11.2014ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.து.ந.க.எண்.பி1/1721/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.583/2014 **பொருள் எண்.17**

**<u>பொது சுகாதாரத்துறை – வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் – 28 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு – 2014–2015 நிதியாண்டு மேயர் அறிவிப்பின்படி வீடற்றவர்களுக்கு பயனளிக்கும் வகையில் மேலும் 42 காப்பகங்கள் துவங்குதல் – சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டில் இல்லாத 12 பள்ளி கட்டிடங்களில் வீடற்றோர் காப்பகங்கள் ஆரம்பிக்கவும், இந்த காப்பகங்களில் தேவையான அடிப்படை வசதிகள் மண்டல அலுவலர்கள் மூலம் ஏற்படுத்தி தரவும் அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 28 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பக்கப்பட்டு இயங்கி வருகின்றன. 2014–2015ம் நிதியாண்டில் மேலும் 42 காப்பகங்கள் துவங்கிட வேண்டி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சென்னை மாநகராட்சியில் வீடற்றவர்கள் அதிகம் வசிக்கும் இடங்களை தேர்வு செய்து அவ்விடத்தில் காப்பகங்கள் அமைத்திட தனியார் இடங்களுக்குரிய பகுதியில் கட்டிடங்களை வாடகை எடுத்தும் அல்லது அரசு கட்டிடத்தில் தங்கும் வசதி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

கல்வி அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 12 பள்ளி கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிலும் இல்லை எனவும், இந்த கட்டிடங்களை சுகாதாரத்துறையின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு குறிப்பு அளித்துள்ளார்.

| வ.எண் | மண்டலம் | வார்டு | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 5 | 58 | சென்னை நடுநிலைப்பள்ளி, இராட்லர் தெரு |
| 2 | 5 | 56 | சென்னை நடுநிலைப்பள்ளி, பி.ஆர்.என்.கார்டன் |
| 3 | 6 | 68 | சென்னை தொடக்கப்பள்ளி, தீட்டித்தோட்டம் |
| 4 | 6 | 104 | சென்னை தொடக்கப்பள்ளி, செங்கல் சூளை சாலை |
| 5 | 6 | 77 | சென்னை நடு நிலைப்பள்ளி, சிவராஜபுரம் |
| 6 | 8 | 106 | சென்னை தொடக்கப்பள்ளி, முத்து இருளாண்டி, அமைந்தகரை, சென்னை–29 |
| 7 | 9 | 126 | சென்னை தொடக்கப்பள்ளி, என். எஸ். விகார் |
| 8 | 9 | 126 | சென்னை தொடக்கப்பள்ளி, டுமீங் குப்பம் |
| 9 | 9 | 110 | சென்னை தொடக்கப்பள்ளி, காம்தார் நகர் |
| 10 | 9 | 114 | சென்னை தொடக்கப்பள்ளி, லாக் நகர் |
| 11 | 9 | 115 | சென்னை நடு நிலைப்பள்ளி, சுப்பிரமணிய தோட்டம் |
| 12 | 9 | 119 | சென்னை தொடக்கப்பள்ளி, புதுப்பாக்கம் |

இந்த 12 பள்ளி கட்டிடங்களை சுகாதாரத்துறையின் கீழ் காப்பகங்களாக மாற்றம் செய்து பயன்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியில் மேற்கண்ட 12 பள்ளி கட்டிடங்களை சுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்து இரவு நேர காப்பகங்களாக அமுல்படுத்த அனுமதியும்,
2. 12 பள்ளி கட்டிடங்களில் இரவு நேர காப்பகங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அந்தந்த மண்டல அலுவலர்கள் மூலம் ஏற்படுத்தி தர அனுமதியும்,
3. இதற்கான செலவினம் மண்டல அளவிலேயே மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்) வின் கூட்டம் 12.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.41/2014ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.469/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ12/3348/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.584/2014 **பொருள் எண்.18**

**சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறை— முறையான அனுமதியின்றி குத்தகை நீட்டிப்பு ஏதும் செய்யாமல் முறையற்ற அனுபோகத்தில் உள்ள குத்தகை நிலங்களை மீட்பது – சொத்து அலுவலர் – அதிகார பங்களிப்பு மாற்றம் செய்ய அரசுக்கு மன்ற அனுமதியுடன் முன்மொழிவுகள் அனுப்ப அனுமதி**

சென்னை மாநகராட்சி பழைய மண்டலம்—1 முதல் 10 வரையில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 541 நிலங்களை கல்வி தொண்டு, வணிகம் மற்றும் குடியிருப்பு போன்ற பயன்பாட்டிற்காக பல ஆண்டுகளுக்கு முன்பே தனியார்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் வருவாய் துறை (Miscellaneous Section) மூலமாக குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலங்களுக்கான நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை தொகையினை உரிமையின்றி அனுபவித்து வரும் அனுபவதாரர்கள் செலுத்த முன் வராததால் மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்க சென்னை மாநகராட்சி ஆணையர் / சொத்து அலுவலர் மூலமாக சென்னை மாநகராட்சி நிலங்களை முறையான அனுமதியின்றி அனுபவித்து வரும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலத்தை பயன்படுத்திவந்தமைக்காக இழப்பீட்டுத் தொகை வசூலிப்பதற்கு 2009-ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொது இடங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர்கள் அகற்றுதல்) சட்டம் 1975 (தமிழ்நாடு சட்டம் 1/1976) —ன்படி தாக்கீது மற்றும் இறுதி அறிவிப்பு வழங்கி குத்தகை நிலங்களை சென்னை மாநகராட்சி வசம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் சில அனுபவதாரர்கள் மட்டுமே இழப்பீட்டு தொகையைச் செலுத்தினர். இதில் பல அனுபவதாரர்கள் இதனை எதிர்த்து முதன்மை நீதிபதி நகர உரிமையியல் நீதி மன்றத்தில் மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளனர். இதற்கான சம்பந்தப்பட்ட 93 கோப்புகள் முதன்மை நகர உரிமையியல் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண்.730. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்.14.04.1976 ன்படி மாநகராட்சி நிலங்களை அரசுத்துறைகள் தவிர தனியார்க்கோ அல்லது தனியார் அமைப்பிற்கோ குத்தகைக்கு உரிமை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. இது மன்றத் தீர்மானம் எண்.182/2000 நாள்.24.04.2000—ன்படி தனி நபர்களுக்கு குத்தகைக்கு நிலங்கள் வழங்குவது தடை செய்யப்பட்டு அதனை இன்று வரை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை தமிழ்நாடு பொது இடங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர்கள் அகற்றுதல்) சட்டம் 1975 (தமிழ்நாடு சட்டம் 1/1976)—ன்படி உரிய முறையில் தாக்கீது மற்றும் இறுதி அறிவிப்பு வழங்கி உரிமையின்றி அனுபவித்து வரும் அனுபவிப்பாளர்களிடமிருந்து நிலத்தை பயன்படுத்தியமைக்காக இழப்பீட்டு கட்டணம் வசூலிக்கவும், ஏற்கனவே குத்தகை வழங்கப்பட்ட இனங்களை நீட்டிக்கவும் / வரண்முறைப்படுத்தவும் / நீதி மன்ற வழக்குகள் அல்லாத அனுபவிப்பாளர்களிடமிருந்து நிலங்களை சென்னை மாநகராட்சி வசம் மீட்கவும் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும்.

தமிழ்நாடு பொது இடங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர்கள் அகற்றுதல்) சட்டம் 1975 பிரிவு (3) ன்படி தமிழ்நாடு ஆளுநரால் சென்னை மாநராட்சிக்கு ஆணையரை சொத்து அலுவலராக நியமித்து அதற்கான அதிகார பங்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட இனங்களில் வழங்கப்படும் அனைத்து அறிவிப்புகளும் / தாக்கீதுகளும் சொத்து அலுவலர் என்ற முறையில் ஆணையருக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் ஆணையருக்கு தேவையற்ற பணிச்சுமை ஏற்படுகிறது. இந்நேர்வில் உடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக சொத்து அலுவலராகவுள்ள ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பங்களிப்பை சென்னை மாநகராட்சிக்கு துணை ஆணையர், (வருவாய் மற்றும் நிதி)—க்கு சொத்து அலுவலராக மாற்றம் செய்யவதற்கான அதிகார பங்களிப்பை அரசாணை மூலம் கோருவதற்கு மன்ற அனுமதியுடன் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்/455/2014, நாள்.18.11.2014—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1 /20622/ 2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.10.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.585/2014 **பொருள் எண்.19**

**<u>கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான திருத்திய பட்டியலுக்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை பதவி உயர்வின் மூலம் நிரப்ப 2014–2015 ஆம் ஆண்டின் தெரிவுப்பட்டியல் 30.05.2014 நாளிட்ட மன்றத்தின் ஒப்புதல் பெற்று, 12.06.2014 நாளிட்ட 3 நபர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து, இப்பதவியில் ஏற்கனவே பணிபுரிந்துவரும் 5 கண்காணிப்பு பொறியாளர்கள் இப்பட்டியலாண்டில் ஒய்வு பெறுகின்றபடியாலும், இப்பதவியை நிரப்ப வேண்டிய அவசியம் கருதி கண்காணிப்புப் பொறியாளர் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை, விதிதளர்வு செய்து 2 ஆண்டுகள் பணிநிறைவு செய்தவர்களையும், 2 ஆண்டுகள் பணிநிறைவு செய்யாதவர்களையும் கொண்டு மேலும் 2 நபர்களை சேர்த்து, 5 நபர்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட திருத்திய தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, மீண்டும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் 2014–15ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர்ப் பட்டியலுக்கு அரசு ஒப்புதல் அளித்து, அதில் இடம் பெற்றிருக்கும் பின்வரும் 3 மண்டல அலுவலர்களுக்கு, அரசாணை(ப) எண்.273, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா–3) துறை, நாள்:28.07.2014ல், **ரூ.37400–67000+தர ஊதியம் ரூ8700** என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கி ஆணை வழங்கப்பட்டது.

1. திரு.ஆர்.வரதராஜன், மண்டல அலுவலர்.
2. திருமதி பிரிஸ்சில்லா திலகராணி, மண்டல அலுவலர்.
3. திரு.எல்.கண்ணன், மண்டல அலுவலர்.

மேற்படி, 2014–15 ஆம் ஆண்டிற்கான திருத்திய தெரிவுப்பட்டியலை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, அரசுக்கு அனுப்பியதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி கோப்பு நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

31.07.2014 நாளிட்ட மன்றத்தீர்மானத்தில், ‘‘ஏற்கனவே 30.05.2014 அன்று நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மானத்தின்படி அரசாணை பெறப்பட்டுள்ளதால் தற்போது அவ்வரசாணைபடி கோப்பினை மீள சமர்ப்பிக்கப்படுவதற்காக இப்பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது.’’ என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர், 2014–15ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியில் 6 ஆண்டு பணிபுரிந்திருக்கவேண்டும் என்ற பணித்தகுதியை தளர்த்தி பின்வரும் 2 மண்டல அலுவலர்களை **ரூ.37400–67000+தர ஊதியம் ரூ8700** என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கி, அரசாணை(ப) எண்.364, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா–3) துறை, நாள்:25.09.2014– ன்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1. திரு. ஆர்.சீனிவாசன், மண்டல அலுவலர்.
2. திரு.எஸ்.ராஜேந்திரன், மண்டல அலுவலர்.

எனவே, 2014–15 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவியில் கூடுதலாக 2 மண்டல அலுவலர்களை பதவி உயர்வு வழங்க அரசின் ஆணையை கோரப்பட்டது. அரசாணை(ப) எண்.364, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா–3) துறை, நாள்:25.09.2014ல் மேற்படி 2 மண்டல அலுவலர்களை, கண்காணிப்பு பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கியுள்ளதால், 2014–15 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு கீழ்கண்ட 5 நபர்கள் கொண்ட திருத்தப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் இடம் திருவாளர்கள் |
|---|---|
| 01 | ஆர்.வரதராஜன், மண்டல அலுவலர், |
| 02 | பிரிஸ்சில்லா திலகராணி, மண்டல அலுவலர், |
| 03 | எல்.கண்ணன், மண்டல அலுவலர், |
| 04 | ஆர்.சீனிவாசன், மண்டல அலுவலர், |
| 05. | எஸ்.ராஜேந்திரன், மண்டல அலுவலர், |

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/7849/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.586/2014 **பொருள் எண்.20**

**ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால் கருத்தியலாக பதவி உயர்வு வழங்கி 2013–2014ம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலில் பெயர் சேர்த்து திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கு சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி/இளநிலை பொறியாளர்களை பொறுப்பாக்கி, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர் அவர்கள் சம்மந்தப்பட்டிருந்ததால் தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970, துணை விதி எண். 10 (b)ன் கீழ் 21.12.2012 நாளிட்ட குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு மூப்புபட்டியல் தயாரிக்கும் நிலையில் திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர் அவர்கள் மீது துணை விதி 10(b)ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிலுவையிலிருந்ததால், தனியரின் பெயரை அப்பட்டியலிலிருந்து நீக்கம்செய்து மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

26.09.2014 நாளிட்ட அரசு கடிதத்தில், தனியர் மீது தொடரப்பட்ட ஒழங்கு நடவடிக்கையை கைவிடும்படி வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில், திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர், அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

27.09.2014 நாளிட்ட கடிதத்தில், திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர், அவர்கள் தன் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கைவிடும்படி, அரசு அறிவுறுத்தியுள்ளபடியால், தனக்கு கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்கிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

22.05.2013 நாளிட்ட மன்ற தீர்மான எண்.351ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2013–2014ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.ஜே.கண்ணன், அவர்கள் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93 மற்றும் அரசாணை (ப) எண். 22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (S) துறை நாள் 24.02.2014ல் பொதுப்பணி விதி 4(a)க்கு வெளியிடப்பட்ட திருத்தங்கள் அடங்கிய ஆணையில், பகுதி–Aல் பிரிவு II(3)ல் குறிப்பிட்டுள்ளபடி, ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் கருத்தியலான பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற ஆணையின்படி, திரு.எல்.ரட்சகர், செயற் பொறியாளர், (தற்போது ஓய்வு) அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

கண்காணிப்பு பொறியாளர் பதவியின் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளர் அவர்கள் 30.09.2014 அன்று வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு. எல். ரட்சகர், செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.7ல் இடம்பெற்றுள்ள திரு.ஜே.கண்ணன், அவர்கள் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ரூ.37400–67000+8700 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்படவேண்டும்.

திரு. எல். ரட்சகர், செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளராக (Notional Promotion) கருத்தியலான பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில், கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், அவரது மூப்புநிலை பின்வருமாறு அமையும்,

| **வ. எ ண்** | **திருத்தியமைக்கப்படும் மூப்புநிலை** | **கண்காணிப்பு பொறியாளர்களின் பெயர்கள்** |
|---|---|---|
| 01. | 1 | திரு.எம்.புகழேந்தி |
| 02. | 2 | திரு.ஜெ.பாபுராஜேந்திரன் |
| 03. | 3 | திரு.எஸ்.நக்கீரன் |
| 04. | 4 | திரு.எம்.செல்வராஜ் |
| 05. | 5 | திரு.கே.உமாபதி |
| 06 | **5A** | **திரு.எல்.ரட்சகர்** |
| 07. | 6 | திரு.ஜெ.கண்ணன் |
| 08. | 7 | கே.ஸ்ரீதரன் |

எனவே, திரு.எல்.ரட்சகர், செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/18898 /2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.587/2014 **பொருள் எண்.21**

**<u>ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால் கருத்தியலாக பதவி உயர்வு வழங்கி 2013–2014ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலில் பெயர் சேர்த்து திருத்திய பட்டியல் வெளியிட அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் பள்ளிக்கட்டடங்கள் கட்டுவதில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றிக்கு பொறுப்பாக்கி சம்மந்தப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்கள் சம்மந்தப்பட்டிருந்ததால் தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970, துணை விதி எண்.10(b)ன் கீழ் 21.12.2012 நாளிட்ட குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கு மூப்புபட்டியல் தயாரிக்கும் நிலையில் திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது துணை விதி 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருந்ததால் தனியரின் பெயரை அப்பட்டியலிலிருந்து 22.05.2013 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி நீக்கம்செய்யப்பட்டது.

26.09.2014 நாளிட்ட அரசு கடிதத்தில், தனியர் மீது தொடரப்பட்ட ஒழங்கு நடவடிக்கையை கைவிடும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

21.12.2012 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகளின்படி, திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 26.09.2014 நாளிட்ட அரசு கடிதத்தின்படியும் மற்றும் 29.09.2014 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக கைவிடப்பட்டதால் 22.05.2013 நாளிட்ட மன்ற தீர்மான எண்.352/2014ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.கே.உமாபதி, அவர்கள் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு, கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கோப்பு மீது மேல் நடவடிக்கை கைவிடப்பட்டதால், **வரிசை எண். 6B-ல் உள்ள திரு.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண். 07–ல் உள்ள திரு.கே.உமாபதி அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண். 6C–ல்** மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு. கே.உமாபதி அவர்கள், செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு, செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு தனியருக்கு செயற்பொறியாளர் பதவியில் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **ரூ.15600 – 39100 + 6600 தர ஊதிய விகிதத்தில் கருத்தியலான (Notional Promotion)** பதவி **உயர்வு வழங்கி செயற் பொறியாளர் (இயந்திரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை), வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் பணியமர்வு செய்தும்,** 2013–2014ஆம் ஆண்டுக்கான செயற் பொறியாளர் தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 6C என தனியருடைய மூப்பு நிலை கீழ்கண்டவாறு நிர்ணயித்தும், தனியர் செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்க 16.10.2014 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர் 20.10.2014 அன்று செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

| வ.எண் | திருத்தியமைக்கப்படும் மூப்புநிலை | செயற்பொறியாளர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | 6B | திரு.எஸ்.ரவிச்சந்திரன் |
| 2 | **6C** | **திரு.ஆர்.சுரேஷ்குமார்** |
| 3 | 7 | திரு.கே.உமாபதி |

எனவே, திரு.ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு செயற் பொறியாளர் பதவியில் கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/2368/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.588/2014 **பொருள் எண்.22**

**சாலை விரிவாக்கம் முக்கிய பிரதான சாலைகள் விரிவாக்கம்– புதிய நில எடுப்பு சட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்வதற்கு – அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தனது இரண்டாவது திட்ட அறிக்கையில் சென்னை மாநகராட்சியின் பேருந்து சாலைகள் எதிர்கால போக்குவரத்தை எதிர்கொள்ளும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளதின் அடிப்படையில் சென்னை மாநகர பேருந்து சாலைகள் விரிவாக்கம் செய்வதற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு இது குறித்து மன்றத்தில் விவாதிக்கப்பட்டு மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனை தொடர்ந்து நில எடுப்பு குறித்து ஆய்வு செய்ய மேற்பார்வை பொறியாளர் பேருந்து சாலைகள் அவர்களால் ஒரு தனியார் நிறுவனம் பணியமர்த்தப்பட்டு நில அளவை பணிகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள நில எடுப்பு சட்டம் 2013 –ன் படி நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி அரசுக்கு மன்ற தீர்மானத்தின் படி கோரிக்கை வைக்கப்பட்டது. தற்போது நில எடுப்பு சட்டம் 2013 –க்கான விதிமுறைகள் தமிழகஅரசால் இறுதி செய்யப்படாத நிலையில் நெடுஞ்சாலை நில எடுப்பு சட்டம் 2007–ன்படி பணிகளை மேற்கொள்ள முகாந்திரம் குறித்து ஆய்வு செய்யும் படி அரசால் பணிக்கப்பட்டது. மேற்படி 2007–ன் சட்டமானது தற்போது நடைமுறையில் இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001–ன் படி நில எடுப்பு குறித்த சாத்தியம் பரிசீலிக்கப்பட்டது. இந்த 2001–ம் ஆண்டு சட்டமானது சிறப்பு அனுமதியின் பேரில் 2014–ம் ஆண்டு டிசம்பர் 31 வரையே அமலில் இருக்கும் என்பது தெரிய வருகின்ற காரணத்தினால் தற்போது இந்த சட்டத்தினை உபயோகப்படுத்துவது சாத்தியமில்லை என்ற காரணத்தினால் புதிய சட்டத்திற்கான தமிழக அரசின் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்வரையில் நில எடுப்பு பணிகளானது தற்காலிகமாக நிறுத்தி வைத்து புதிய சட்டத்திற்கான விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும் வரையில் நில எடுப்பு அட்டவணை (LPS) மற்றும் நிரந்தர நகர அளவை பதிவேட்டின் படி சம்மந்தப்பட்ட நிலங்களின் உரிமைதாரர்களை இறுதி செய்யும் பணி ஆகிய அடிப்படை பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில எடுப்பு அட்டவணை தயார் செய்தப் போது முதல் தொகுப்பில் குறிப்பிடப்பட்ட 14 சாலைகளில் சாலை விரிவாக்கத்திற்கு மொத்தமாக 143763.9 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும் என தெரிய வருகிறது. இந்த நிலங்களில் 112327.2 சதுர மீட்டர் பரப்பளவு நிலமானது தனியாரிடம் இருந்து ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும் என்றும் 31436.8 சதுர மீட்டர் பரப்பளவு நிலமானது மாநகராட்சி, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் சார்ந்த நிலம் என்பது கண்டறியப்பட்டது.

எனவே முதல் கட்டமாக மாநகராட்சி மற்றும் அரசு சம்மந்தப்பட்ட நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இந்த நிலங்கள் குறித்த ஆய்வு செய்த போது மாநராட்சிக்கு சம்மந்தப்பட்ட சிறு கட்டிடங்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவையும் மாநில அரசு சம்மந்தப்பட்ட பல்வேறு துறைகளின் கட்டிடங்கள், கல்வி நிறுவனங்களின் காலியிடங்கள் மேலும் பல்வேறு துறைகளின் கட்டிடங்களின் திறந்தவெளி நிலங்கள் ஆகியவையும் மத்திய அரசின் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் திறந்தவெளி நிலங்கள் என்பதும் கண்டறியப்பட்டன.

கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்ட நிலங்களை பொறுத்தவரை

**ABSTRACT OF AREA OF LAND ACQUISTION OF COC-BUS ROUTE ROADS**

| Sl. No. | Name | Length as per COC (m) | Pro posed ROW (m) | Existing ave. ROW (m) | Area to be acquired (Sq.m) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Government land | Private land | Total land |
| 1 | Sardar Patel Road | 3200.00 | 30.50 | 20.00 | 18821.7 | 3286.5 | 22108.2 |
| 2 | Nelson Manickam Road | 1526.00 | 24.00 | 15.00 | 52.7 | 4229.7 | 4282.4 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | Santhome High Road | 1630.00 | 24.00 | 11.00 | 869.9 | 9806.4 | 10676.3 |
| 4 | Strahans Road | 1250.00 | 24.00 | 11.00 | 2360.9 | 5939.1 | 8300.1 |
| 5 | Perambur Barracks Road | 1420.00 | 24.00 | 9.00 | 859.3 | 11098.6 | 11958.0 |
| 6 | Dr.Muthulakshmi salai | 2860.00 | 30.50 | 15.00 | 277.0 | 11803.4 | 12080.3 |
| 7 | Kalki krishnamuruthy salai | 820.00 | 30.50 | 15.00 | 709.6 | 7191.9 | 7901.6 |
| 8 | Kaliamman Kovil Street | 3100 (1140 + 1950) | 24.00 & 27.00 | 9.60 | 4918.8 | 20651.1 | 25569.9 |
| 9 | Paper mills road | 1480.00 | 18.00 | 9.00 | 573.8 | 5195.7 | 5769.5 |
| 10 | Sembiam-red hills road | 2540.00 | 18.00 | 9.00 | 13.1 | 7945.5 | 7958.6 |
| 11 | Arcot road ( NSK salai) | 4770.00 | 30.50 | 17.00 | 1979.8 | 25179.3 | 27159.1 |
| | | | | **Grand Total** | **31436.8** | **112327.2** | **143763.9** |

1) சம்மந்தப்பட்ட மாநில மற்றும் மத்திய அரசு துறைகளிடம் நில மதிப்பின்றி கோரி பெறுவதற்கு அரசு அனுமதி கோரவும்,
2) அரசாணை எண்.281, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்சி1) துறை, நாள் 14.07.2004–ன்படி அறிவிக்கை(Notification) செய்யப்பட்டுள்ள பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறந்தவெளி நிலங்கள் ஆகியவற்றினை மறு அறிவிக்கை மூலம் அறிவிக்கை விலக்கு (Denotification) அளிக்கும் அதிகாரம் அரசுக்கு தான் உள்ளது என்பதால் சாலை விரிவாக்க பகுதிகளில் உள்ள அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு அறிவிக்கை விலக்கு அளிப்பது குறித்து அரசிற்கு முன் மொழிவுகள் அனுப்புவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் பரிந்துரையுடன் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்) வின் கூட்டம் 17.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.454/2014ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.470/2014ன்படி நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/3025/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.589/2014 **பொருள் எண்.23**

**மண்டலம்–6, பகுதி எண்.13 அயனாவரம் வட்டம் – புதியதாக ஏற்படுத்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம் இயங்குவதற்கு – காா்ப்பரேசன் புறம்போக்கு என குறிப்பிடப்பட்டுள்ள இந்நிலத்தில் – அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு காலி நிலம் ஒதுக்கீடு–முன் நுழைவு அனுமதி**

சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம் மற்றும் கிராமம், பகுதி எண்.13, நகர புல எண்.103, விஸ்தீரணம் – 8 கிரவுண்டு 1012 சதுர அடி (0.18.78.0 சமீ), வகைபாடு – சர்க்காா் புறம்போக்கு, ஷரா – காா்ப்பரேஷன் புறம்போக்கு என நிரந்தர நிலப்பதிவேட்டின்படி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலத்தை அயனாவரம் வட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும், பொது மக்கள் எளிதில் வந்து செல்வதற்கும் மற்றும் போக்குவரத்து வசதியுடன் உள்ளது எனவும் இந்நிலத்தின் புதியதாக அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மான இசைவினை பெற்று வழங்குமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் வட்ட துணை ஆணையர் (மத்தியம்) அவர்களது கடிதத்தில் அயனாவரம் வட்டம் கொளத்தூர் நகர புல எண்.10/2 மற்றும் 10/5ல் முறையே 1.39 ஏக்கர் மற்றும் 0.44 ஏக்கர் அனாதீனம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்பேரில் மாவட்ட ஆட்சியர் அயனாவரம் அலுவலகம் மாண்புமிகு தமிழ்க முதல்வர் அறிவிப்பின்படி அயனாவரம் கிராமத்தில்தான் அமைக்கப்படவேண்டும் என தெரிவித்துள்ளதால் மேற்படி புலத்தில் வட்டாட்சியர் அலுவலக கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியின் இசைவினை பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் அயனாவரம் கிராமம் பிளாக் எண்.13 நகர புல எண்.103–ல் 8 கிரவுண்டு 1012 சதுர அடி நிலத்தில் அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகம் அமையப்பெறும் பட்சத்தில் மேற்படி இடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுவதாலும் இதில் எந்தவித வியாபார நோக்கும் இல்லாத காரணத்தினாலும் மேற்படி நிலத்தை வருவாய்த்துறைக்கு நிலக்கிரையமின்றி நிலமாற்றம் செய்ய சென்னை மாநகராட்சி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளதின் அடிப்படையில் 06.11.2014 அன்று மாவட்ட வருவாய் அலுவலர்/நிஉமது மற்றும் சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் கூட்டுபுலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்டம் அயனாவரம் வட்டம் மற்றும் நகரம் மண்டலம் 6 நகர நில அளவை எண்.103, பரப்பு 8 கிரவுண்டு 1012 சதுர அடி (0118.78.0 சமீ), வகைப்பாடு சர்க்காா் புறம்போக்கு என நிரந்தர நில பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இப்புலத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட அயனாவரம் வட்டத்திற்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் சென்னை மாநகராட்சி மாமன்ற முன் நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இப்புலத்தின் ஜக்பந்தி பின்வருமாறு அமைந்துள்ளது.

வடக்கு – புதிய ஆவடி ரோடு

தெற்கு – மேற்குத் தெரு

மேற்கு – பள்ளி அரசன் தெரு

கிழக்கு – துணை உயர் மின் அழுத்த நிலையம்–(எழும்பூர் வட்டம் கீழ்ப்பாக்கம் நகரம்)

மேற்படி புலத்தில் வடக்கு 201 அடி, தெற்கு 186 அடி, கிழக்கு 112 அடி மற்றும் மேற்கு 99 அடி நிலம் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்திற்காக நிலம் கோரப்பட்டுள்ளது. இப்புலத்தின் கிழக்கே அங்கன்வாடி மையம். மேற்கு பகுதியில் தற்காலிகமாக காவல் சேவை மையம் அமையப்பெற்றுள்ளது. தெற்கு பகுதியில் கழிவறைக்காக ஒதுக்கப்பட்டு சுற்றுச் சுவர் கட்டப்பட்டு காலியாகவுள்ளது. புலத்தில் உயர்மின் அழுத்த கம்பிகள் மூன்று தென் கிழக்கிலிருந்து வட மேற்காக செல்கின்றது. மேலும் இரண்டு ஒதிய மரங்கள் உள்ளது. மேலும் விளையாடுவதற்காக நெட் கட்டுவதற்கு இருபுறமும் இரும்பு பைப்புகள் நடப்பட்டுள்ளது. ஆனால் பயன்பாட்டில் உள்ளதாக தெரியவில்லை. மேற்படி இடத்திற்கு பொதுமக்கள் எளிதில் வந்து செல்வதற்கு போக்குவரத்து வசதி கொண்டதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் பதிவுத்துறை பதிவுகளின்படி மேற்படி நிலத்திற்கு வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஒரு சதுர அடி ரூ.3000/– என குறிப்பிட்டுள்ளார். அதன்படி 8 கிரவுண்டு 1012 சதுரடி ஆக மொத்தம் 20,212 சதுரஅடி நிலத்திற்கு மதிப்பு ரூ.6,06,36,000 (ரூபாய் ஆறு கோடியே ஆறு இலட்சத்து முப்பத்தி ஆறாயிரம் மட்டும்) ஆகும்.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தில் அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கும் முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கு வார்டு குழுவின் பின்னேற்புக்குட்பட்டு நிலைக்குழு (ம) வரிவிதிப்பு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“18.11.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.463/2014, நாள்.18.11.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/4054/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.590/2014 பொருள் எண்.24

**மண்டலம்–3, வார்டு–29க்கு உட்பட்ட பியூச்ரா பாலியஸ்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் – திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் வட்டம் சின்ன சேக்காடு கிராமத்தில் 845500 ச.மீ பரப்பில் தொழிற்சாலைகள் மனைபிரிவு அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம் விண்ணப்பம் – சென்னை மாநகராட்சிக்கு சாலைகள் பூங்காக்கள் மற்றும் திறந்தவெளி நிலங்களுக்காக தானபத்திரம் மூலமாக பெற்றுக் கொள்ள அனுமதி**

மண்டலம்–3, கோட்டம்–29ல் திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், சின்னசேக்காடு கிராமத்தில் புல எண்கள். 21/1 மற்றும் பல (192.72 ஏக்கர்) நிலம் நில எடுப்பு சட்டம் 1894 (மத்திய சட்டம் 1/1894) படி கையகப்படுத்தப்பட்டு அரசாணை எண்.1056 (வருவாய் துறை), நாள்.9.5.1975ன்படி இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிட் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி பட்டா எண்.2ல் இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல் லிட் பெயரில் தாக்கலாகி உள்ளது. மேற்படி கம்பெனியுடன் மணலியில் உள்ள பியூச்ரா பாலியஸ்டர்ஸ் லிமிடெட் மற்றும் பியூச்ரா இண்டஸ்ரீஸ் லிமிடெட் ஆகிய இரண்டு கம்பெனிகளும் இணைத்து ஒரே தொழிற்சாலையாக பியூச்ரா பாலியஸ்டர் என்ற பெயரில் இயங்க அரசாணை (நிலை) எண். 286 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எம்2) துறை, நாள் 29.9.2004ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி பியூச்ரா பாலியஸ்டர் நிறுவனத்தை மூடுவதற்கு அரசாணை எண்.517, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எ2) துறை, நா.17.10.2013ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேற்படி கம்பெனி சொத்துக்களை விற்று அதன் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நிலுவைகளை செலுத்த அரசு ஆணையிட்டுள்ளதால், தற்பாது சொத்துக்களை விற்பதற்காக திட்ட வரைபட அனுமதி பெற வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் 192.72 ஏக்கரில் புல எண்கள்.21/1,22, 23/1, 24, 25, 26/2, 27/1, 27/3, 37/1, 38/2, 39/2, 40/2, 41/2, 42, 43,44/2, 45, 46, 47, 48/1, 49/1, 50/1எ, 50/1பி, 51/1 , 51/2, 52, 53, 54, 55/1, 55/2, 55/3, 56, 57/1, 57/2, 57/3, 57/4, 58/1, 58/3, 58/4, 59/1, 60/1, 61, 62, 63, 64, 65, 66/1, 67/1, 68, 69, 70, 71 மற்றும் 75/1 உள்பட 8,45,500 சதுர மீட்டர் பரப்பில் தொழிற்சாலை மனைபிரிவு அனுமதி கோரியதில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிமுறைகளின்படி சென்னை மாநகராட்சிக்கு சாலைகளுக்காக 1,59,835 சதுர மீட்டரும், பூங்காவிற்காக 68,781 சதுர மீட்டரும் ஆகிய திறந்தவெளி நிலங்களுக்காக தானபத்திரம் மூலமாக வழங்க மேற்படி நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்நிலங்களை வார்டுகுழுவின் பின்னேற்பு அடிப்படையிலும், சென்னை மாநகராட்சியின் அனைத்து சட்டப்பூர்வமான நிபந்தனைகளுக்குட்பட்டு சாலைகள் மற்றும் பூங்காக்களுக்கான திறந்தவெளி நிலங்களை சென்னை மாநகராட்சி பெறுவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 18.11.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2014 அன்று தீர்மான எண்.471/2014ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (வரிவிரிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*********